## பகுதி அ

1. ‘தமிழ்த்தாய் வாழ்த்துப்’ பாடலை இயற்றியவர் யார்?

   (A) பாரதியார்

   (B) பாரதிதாசன்

   (C) ச.து.சு. யோகியார்

   (D) மனோன்மணீயம் பெ. சுந்தரனார்

2. 13 என்னும் எண்ணின் சரியான எழுத்து வடிவம் என்ன?

   (A) பதிமூனு

   (B) பதிமூன்று

   (C) பதின்மூன்று

   (D) பதிமூணு

3. ‘அமுதென்று’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

   (A) அமுதம் + என்று

   (B) அமுதம் + அன்று

   (C) அமுது + என்று

   (D) அமுது + அன்று

4. ‘தமிழர் திருநாள்’ எனப் போற்றப்படும் பண்டிகை எது?

   (A) தீபாவளி

   (B) ஆயுத பூஜை

   (C) தைப்பொங்கல்

   (D) தமிழ்ப் புத்தாண்டு

5. ‘———————— வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்’ — கோடிட்ட இடத்தை நிரப்புக.

   (A) சான்றிதல்

   (B) சான்றிதழ்

   (C) சாண்றிதழ்

   (D) சாண்றிதல்

6. ‘பணிவன்புடன்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

   (A) பணி + அன்புடன்

   (B) பணிவு + அன்புடன்

   (C) பணி + வன்புடன்

   (D) பணிவு + வன்புடன்

7. 'Lorry' – என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல் எது?

(A) சிற்றுந்து
(B) பேருந்து
(C) சரக்குந்து
(D) மகிழுந்து

8. 'பொய்யில் புலவர்' எனப் போற்றப்படுபவர் யார்?

(A) கம்பர்
(B) திருவள்ளுவர்
(C) இளங்கோவடிகள்
(D) பாரதியார்

9. திருவள்ளுவர் சிலை 133 அடியளவில் அமைந்துள்ள ஊர் எது?

(A) சென்னை
(B) மயிலாப்பூர்
(C) கன்னியாகுமரி
(D) பெங்களூரு

10. 'தொடுதொடு' – இலக்கணக் குறிப்பு வரைக.

(A) இரட்டைக்கிளவி
(B) உரிச்சொல்
(C) இடைச்சொல்
(D) அடுக்குத் தொடர்

11. 'பிளிறும்' விலங்கு எது?

(A) புலி
(B) யானை
(C) சிங்கம்
(D) கரடி

12. யாழ் எனப்படுவது

(A) தோல் கருவி
(B) நரம்புக் கருவி
(C) காற்றுக் கருவி
(D) கஞ்சக் கருவி

13. ‘மேடுபள்ளம்’ என்பது

(A) பழமொழி
(B) எதிரிணைச்சொல்
(C) மரபுத் தொடர்
(D) சொலவடை

14. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) இயக்குனர்
(B) இயக்குணர்
(C) இயக்குந்நர்
(D) இயக்குன்னர்

15. மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது

(A) இலக்கணம்
(B) கவிதை
(C) உரைநடை
(D) காப்பியம்

16. கண்காணிப்புக் கருவி பயன்படுத்தும் அறிவு

(A) இயற்கை நுண்ணறிவு
(B) செயற்கை நுண்ணறிவு
(C) உண்மை அறிவு
(D) ஆறாம் அறிவு

17. விருந்தும் மருந்தும் —————— வேளை.

(A) இரண்டே
(B) மூன்றே
(C) ஒரே
(D) நான்கே

18. ‘முயற்சி திருவினை ஆக்கும்’ என்பது

(A) ஒரு பழமொழி
(B) ஆத்திசூடி
(C) திருக்குறள் தொடர்
(D) கொன்றைவேந்தன்

19. ‘Internet’ என்பதன் தமிழாக்கம் என்ன?

(A) இன்டர்நெட்
(B) வலைத்தளம்
(C) இணையம்
(D) அகன்ற அலைவரிசை

20. '—————— தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' – கோடிட்ட இடத்தை நிரப்புக.

(A) தொல்காப்பியன்
(B) வள்ளுவன்
(C) வள்ளலார்
(D) கம்பன்

21. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி எது?

(A) குழல்
(B) யாழ்
(C) தேவ துந்துபி
(D) தப்பு

22. காடும் காடுசார்ந்த இடமும்

(A) குறிஞ்சி
(B) முல்லை
(C) மருதம்
(D) நெய்தல்

23. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று எது?

(A) நற்றிணை
(B) நன்னெறி
(C) திருக்குறள்
(D) நல்வழி

24. மெய் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

(A) 12
(B) 18
(C) 01
(D) 216

25. 'மாலவன் குன்றம்' என்பது

(A) திருத்தணி
(B) திருப்பரங்குன்றம்
(C) திருவேங்கடம்
(D) சுவாமிமலை

26. உதடுகள் இரண்டும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள்

(A) ப், ம் (B) ய், ர்

(C) க், ங் (D) த், ந்

27. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

(A) உழவு, மண், ஏர், மாடு (B) மண், மாடு, ஏர், உழவு

(C) உழவு, ஏர், மண், மாடு (D) ஏர், உழவு, மாடு, மண்

28. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக்காப்பியம் எது?

(A) சிலப்பதிகாரம் (B) குண்டலகேசி

(C) மணிமேகலை (D) வளையாபதி

29. காலத்தைக் காட்டும் சொல் எது?

(A) பெயர்ச்சொல் (B) வினைச்சொல்

(C) இடைச்சொல் (D) உரிச்சொல்

30. ‘ஒரு பைசாத்தமிழன்’ என்னும் வார இதழைத் தொடங்கியவர் யார்?

(A) பாரதியார் (B) பாரதிதாசன்

(C) கண்ணதாசன் (D) அயோத்திதாசர்

31. தமிழ்நாட்டின் மாநில மரம் எது?

(A) ஆலமரம்
(B) தென்னை மரம்
(C) பனை மரம்
(D) மாமரம்

32. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

(A) சுப்பிரமணியம்
(B) மாணிக்கம்
(C) முத்தையா
(D) கனக சுப்புரத்தினம்

33. வேறுபட்டதை நீக்குக.

(A) யாழ்
(B) முழவு
(C) பறை
(D) பண்

34. —————— உயிரினும் ஓம்பப்படும்.

(A) ஒழுக்கம்
(B) உணவு
(C) செல்வம்
(D) நட்பு

35. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | பொருட்பெயர் | – | 1. | கோவில், வடலூர் |
| ஆ | இடப்பெயர் | – | 2. | தலை, கால் |
| இ. | காலப்பெயர் | – | 3. | புத்தகம், கதவு |
| ஈ. | சினைப்பெயர் | – | 4. | பகல், இரவு |

(A) (அ)3, (ஆ)1, (இ)4, (ஈ)2
(B) (அ)4, (ஆ)1, (இ)2, (ஈ)3
(C) (அ)2, (ஆ)3, (இ)1, (ஈ)4
(D) (அ)1, (ஆ)2, (இ)3, (ஈ)4

36. ‘தமிழ் தென்றல்’ எனப் போற்றப்படுபவர் யார்?

(A) விபுலானந்த அடிகள்
(B) க. கைலாசபதி
(C) திரு.வி.க.
(D) எஸ். வையாபுரிப் பிள்ளை

37. ஆண்கள் மட்டும் ஆடக்கூடிய நடனம் எது?

(A) கரகாட்டம்
(B) மயிலாட்டம்
(C) காவடியாட்டம்
(D) தேவராட்டம்

38. பராபரம் என்ற சொல்லின் பொருள் என்ன?

(A) இன்பப்பெருக்கு
(B) ஆனந்தப்பெருக்கு
(C) இறையானந்தம்
(D) மேலான பொருள்

39. ‘தீயணைப்பு’ – பிரித்து எழுதுக.

(A) தீ + யணைப்பு
(B) தீயணை + பு
(C) தீயணைப் + பு
(D) தீ + அணைப்பு

40. ‘ஐ’ என்னும் ஓரெழுத்து மொழியின் பொருள் என்ன?

(A) தலைவன்
(B) அம்பு
(C) இறைச்சி
(D) மலர்

41. ஒலியின் வரிவடிவம் எது?

(A) பேச்சு
(B) பாட்டு
(C) உரை
(D) எழுத்து

42. 'மாயோன்' எனக் குறிப்பிடப்படும் தெய்வம்

(A) திருமால்
(B) சேயோன்
(C) வேந்தன்
(D) வருணன்

43. ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) அஷ்டாவதானம்
(B) தசாவதானம்
(C) சோடஷாவதானம்
(D) சதாவதானம்

44. 'விசும்பு' என்னும் சொல்லின் பொருள் என்ன?

(A) நிலம்
(B) நீர்
(C) வான்
(D) தீ

45. திருவெம்பாவை, திருப்பாவை பாடல் வரிகளைத் தாய்மொழியில் எழுதிவைத்து பாடும் நாடு எது?

(A) சிங்கப்பூர்
(B) தாய்லாந்து
(C) மலேசியா
(D) மியான்மர்

46. ‘பொன்னேர் பூட்டுதல்’ நடைபெறும் மாதம் எது?

(A) சித்திரை

(B) வைகாசி

(C) ஆடி

(D) தை

47. கீழ்கண்டவற்றில் பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் எவை?

(A) இந்தியா, சுதேசமித்ரன்

(B) ஆனந்த விகடன், கணையாழி

(C) கசடதபற, மணிக்கொடி

(D) தேசபக்தன், கலாமோகினி

48. ‘ஊழி’ என்னும் சொல்லின் பொருள் என்ன?

(A) யுகம்

(B) கடல்

(C) வானம்

(D) பூமி

49. செய்தி-1 : செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவாகும்.

செய்தி-2 : மனிதனால் செய்ய முடியாததைச் செய்கிறது.

செய்தி-3 : செயற்கை நுண்ணறிவு கணினி மனிதரைப் போல் தானே முடிவெடுக்கும்.

(A) 1,2 சரி

(B) 1,3 சரி

(C) 2,3 சரி

(D) 3,1 சரி

50. ‘ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்’ என கூறியவர் யார்?

(A) ஔவையார்

(B) முனைப்பாடியார்

(C) உலகநாத பண்டிதர்

(D) பாரதியார்

## பகுதி ஆ

51. வீடுகளில் இயற்கையான முறையில் ———— பயன்படுத்தி பூச்சிகளை தடுக்கலாம்.

(A) துளசி இலை
(B) களைக்கொள்ளி
(C) வேப்ப இலை
(D) (A) அல்லது (C)

52. பருவமுதிர்ச்சியின் போது ———— அகன்று ஒலி மாறுபடும்.

(A) குரல்வளை
(B) தசைகள்
(C) தைராய்டு
(D) மூச்சுக்குழாய்

53. கீழ்கண்டவற்றில் எதனை பயன்படுத்தி உராய்வை குறைக்கலாம்?

(A) டயர்களில் கோடு கோடான பள்ளங்கள் ஏற்படுத்துவதன் மூலம்
(B) இடைவெளிகளில் கற்களை தூவுவதன் மூலம்
(C) பரப்புகளை வழுவழுப்பாக்குவதன் மூலம்
(D) நல்ல பிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம்

54. ———— உலகிலேயே மிகப்பெரிய பள்ளிவாசல்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

(A) நாகூர் தர்கா
(B) மெக்கா மசூதி
(C) அதினா மசூதி
(D) ஜும்மா மசூதி

55. தமிழ்நாட்டிலுள்ள நெய்வேலியிலிருந்து ———— அதிகமாக கிடைக்கிறது.

(A) ஆன்ட்ராஸைட்
(B) பழுப்பு நிலக்கரி
(C) மணல் பாறை
(D) எரிபொருள்

56. ________________ வயதிற்குட்பட்டவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

(A) 18
(B) 12
(C) 14
(D) 16

57. பித்த நீர் எந்நிறத்தை உடையது?

(A) மஞ்சள்
(B) பச்சை
(C) சிவப்பு
(D) நிறமற்றது

58. இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருது எது?

(A) பத்மபூஷன் விருது
(B) கலைமாமணி விருது
(C) ஞானபீட விருது
(D) சாகித்ய அகாடமி விருது

59. இந்தியா முதல் அணுகுண்டு சோதனை நடத்திய இடம்

(A) ஸ்ரீஹரிகோட்டா
(B) டிராம்பே
(C) பொக்ரான்
(D) தாராப்பூர்

60. இரவு நேரத்தில் வாகனத்தை சாலை ஓரத்தில் நிறுத்தும்போது

(A) வாகனம் பூட்டப்பட வேண்டும்
(B) ஓட்டுநர் வாகனத்தை விட்டு செல்லக்கூடாது
(C) வாகன நிறுத்தத்திற்குரிய விளக்கு தொடர்ந்து ஒளிர வேண்டும்
(D) வாகனத்தை செங்குத்தாக நிறுத்த வேண்டும்

61. மூடுபனி விளக்குகள் எப்போது பயன்படுத்தப்படுகின்றன?

(A) பகலில்

(B) மூடுபனி இருக்கும்போது

(C) எதிரே வரும் வாகனம் மங்கலான ஒளியைப் பயன்படுத்தாதபோது

(D) இரவு நேரத்தில்

62. வாகனத்தில் எரிபொருள் நிரப்பும்போது நாம் ———— கூடாது.

(A) ஹெட்லைட் பயன்படுத்துவது

(B) ஒலியை எழுப்புவது

(C) வாகனத்தின் உள்ளே விளக்கை பயன்படுத்துவது

(D) புகை பிடிப்பது

63. பின்வரும் போக்குவரத்து குறியீடு குறிப்பது



(A) இடதுபுறம் திரும்ப தடை

(B) இடதுபுறம் திரும்பு

(C) முந்தி செல்ல தடை

(D) வழி தடைசெய்யப்பட்டுள்ளது

64. ஆளில்லா இரயில்வே பாதையை கடக்கும்போது, ஓட்டுநர் கண்டிப்பாக

(A) ஒலி எழுப்பி வாகனத்தை இயக்க வேண்டும்

(B) நிறுத்தி, கவனித்து பாதுகாப்பாக இருந்தால் வாகனத்தை இயக்க வேண்டும்

(C) மெதுவாக வாகனத்தை இயக்க வேண்டும்

(D) உடனடியாக வாகனத்தை இயக்க வேண்டும்

65. பின்வரும் போக்குவரத்து குறியீடு எதனை குறிக்கிறது?



(A) மோட்டார் வாகனங்கள் செல்ல தடை

(B) வாகனங்களை நிறுத்த தடை

(C) மோட்டார் வாகனங்கள் மற்றும் கார்கள் செல்லலாம்

(D) மோட்டார் வாகனங்கள் மற்றும் கார்கள் செல்ல தடை

66. புதிய வாகனத்திற்கு மாசு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் செல்லுபடியாகும் காலம்

(A) ஆறு மாதங்கள்

(B) ஓர் ஆண்டு

(C) இரண்டு வருடங்கள்

(D) மூன்று மாதங்கள்

67. வாகனங்களை எங்கு நிறுத்த தடைசெய்யப்பட்டுள்ளது?

(A) மற்றொரு காருக்கு முன்னால்

(B) நடைபாதையில்

(C) ஒரு வழி பாதையில்

(D) வாகனங்களை நிறுத்தும் இடத்தில்

68. பார்வையற்ற ஒருவர் வெள்ளை நிற கைத்தடியுடன் (வாக்கிங் ஸ்டிக்) சாலையைக் கடக்கும்போது, ஓட்டுநர்

(A) ஒலியை எழுப்பி வாகனத்தை இயக்கலாம்

(B) வேகத்தைக் குறைத்து எச்சரிக்கையுடன் வாகனத்தை இயக்கலாம்

(C) வெள்ளை நிற கைத்தடியை வாகனத்தை நிறுத்தும் போக்குவரத்துச் சமிக்ஞையாக கருத வேண்டும்

(D) போக்குவரத்து சமிக்ஞை இல்லை என்றால் வாகனத்தை இயக்கலாம்

69. சாலையில் தொடர்ந்து மஞ்சள் நிற கோடு இடப்பட்ட இடத்தில், கண்டிப்பாக

(A) வாகனம் மஞ்சள் நிறக்கோட்டை தொடவோ கடக்கவோ கூடாது

(B) வாகனத்தை நிறுத்தி பச்சை விளக்கு தோன்றும் வரையில் காத்திருக்கவும்

(C) வாகனத்தின் வேகத்தைக் குறைத்து பாதுகாப்பாக இருந்தால் இயக்கலாம்

(D) எந்த எச்சரிக்கையும் தேவையில்லை

70. வாகனத்தை பின்னே இயக்க தடைசெய்யப்பட்ட சாலையின் பெயரைக் குறிப்பிடவும்

(A) செங்குத்தாக ஏறும் சாலை

(B) செங்குத்தாக இறங்கும் சாலை

(C) ஒருவழிச் சாலை

(D) நெடுஞ்சாலை

71. மினுமினுக்கும் (பிளிங்கிங்) சிவப்பு நிற போக்குவரத்து சமிக்ஞை எதனை குறிக்கிறது?

(A) போக்குவரத்து சமிக்ஞைகள் சரியாக இயங்கவில்லை

(B) போக்குவரத்து சமிக்ஞையை சரிபார்க்க தேவையில்லை

(C) பச்சை விளக்கு தோன்றும் வரை வாகனத்தை நிறுத்தவும்

(D) வாகனத்தை நிறுத்தி பாதுகாப்பாக இருந்தால் தொடரவும்

72. ஒரு வாகனத்தை முந்திச் செல்லும் போது, ஓட்டுநர்

(A) வேகத்தை அதிகரிக்கக் கூடாது

(B) வேகத்தை அதிகரிக்கலாம்

(C) எச்சரிக்கையுடன் வேகத்தை அதிகரிக்கலாம்

(D) வாகனத்தை நிறுத்த வேண்டும்

73. பின்வரும் போக்குவரத்து குறியீட்டின் பொருள் என்ன?



(A) குடிபோதையில் வாகனம் ஓட்டக்கூடாது

(B) வழுக்கும் வழி பாதை

(C) சரளைக் கற்கள் உள்ள பாதை

(D) கோணல் மாணலான பாதை

74. பதிவு செய்யப்படாத வாகனத்தை பொது இடத்தில் பயன்படுத்துவது

(A) சட்டப்படியானது ஏதேனும் அவசரம் இருந்தால்

(B) சட்டப்பூர்வமானது

(C) சட்டத்திற்கு புறம்பானது

(D) தடையில்லை

75. இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான குறைந்தபட்ச வயது

(A) 16 (B) 14

(C) 25 (D) 20

76. வாகனத்தை நிறுத்தும்போது பின்வருவனவற்றில் எது பயன்படுத்தப்படுகிறது?

(A) கை பிரேக் (B) இருக்கை பெல்ட்

(C) பக்கவாட்டில் உள்ள கண்ணாடிகள் (D) காற்று திரை

77. பின்புறக் கண்ணாடி (ரியர் வியூ மிரர்) எதற்கு பயன்படுகிறது?

(A) முகம் பார்ப்பதற்கு

(B) பின்வரும் வாகனங்களை பார்ப்பதற்கு

(C) பின் இருக்கையில் அமர்ந்து இருக்கும் பயணிகளை பார்ப்பதற்கு

(D) அலங்காரப் பொருட்களை தொங்கவிடுவதற்கு

78. வரிக்கடவை (ஜீப்ரா கிராஸிங்) எதற்கு பயன்படுகிறது?

(A) வாகனங்களை நிறுத்துவதற்கு

(B) வாகனம் செல்ல முன்னுரிமை அளிப்பதற்கு

(C) வாகனங்கள், வேகத்தை குறைப்பதற்கு

(D) பாதசாரிகள் சாலையை கடந்து செல்வதற்கு

79. வாகனம் ஓட்டும்போது ஓட்டுநர் எப்போதும் —————— அணிந்திருக்க வேண்டும்.

(A) இருக்கை பெல்ட்

(B) காலணிகள்

(C) சீருடை

(D) கையுறைகள்

80. வாகனம் ஓட்டும்போது பின்வரும் எந்தப் பொருளை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது?

(A) கண்ணாடிகள்

(B) கைப்பேசி

(C) கைக்கடிகாரம்

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

81. இயல்பாக ஒரு நபர், ஒரு நிமிடத்திற்கு எத்தனை முறை சுவாசிப்பார்?

(A) 30-60

(B) 8-10

(C) 12-20

(D) 20-40

82. மயங்கி விழுந்த ஒருவரை மீட்க உடனடியாக நாம் என்ன செய்ய வேண்டும்?

(A) சமநிலையில் படுக்கவைக்க வேண்டும்

(B) நாற்காலியில் உட்கார வைக்க வேண்டும்

(C) நிமிர்ந்து நிற்க வைக்க வேண்டும்

(D) கால்களை உயர்த்திய நிலையில் படுக்க வைக்க வேண்டும்

83. ஒருவருக்கு மூக்கில் இரத்தம் வந்தால் அவருடைய தலை எந்த நிலையில் இருக்க வேண்டும்?

(A) தலையை முன்னோக்கி சாய்த்தல்
(B) தலையை பக்கமாக சாய்த்தல்
(C) தலையை அதே நிலையில் வைத்தல்
(D) தலையை பின்னோக்கி சாய்த்தல்

84. இந்தியாவில் 44வது செஸ் ஒலிம்பியாட் எந்த மாநிலத்தில் நடைபெற்றது?

(A) கர்நாடகா
(B) உத்திரபிரதேசம்
(C) தமிழ்நாடு
(D) டெல்லி

85. தமிழ்நாடு காவல்துறையின் சேவையை அங்கீகரிக்கும் வகையில், இந்திய துணைக் குடியரசுத் தலைவரால் தமிழக முதல்வருக்கு ———— வழங்கப்பட்டது.

(A) பதக்கம்
(B) சிறப்பு பேட்ஜ்
(C) குடியரசுத் தலைவர் கொடி
(D) நினைவு பரிசுகள்

86. தமிழ்நாட்டிற்கு மழை கிடைப்பது

(A) தென்கிழக்கு பருவமழையால்
(B) தென்மேற்கு பருவமழையால்
(C) வடகிழக்கு பருவமழையால்
(D) வடமேற்கு பருவமழையால்

87. பென்சில் தயாரிக்க ———— பயன்படுகிறது.

(A) கார்பன்
(B) கிராபைட்
(C) கருப்பு மை
(D) கார்பைட்

88. இந்திய உச்சநீதிமன்றம் எங்கு அமைந்துள்ளது?

(A) மகாராஷ்டிரா
(B) உத்திரபிரதேசம்
(C) புதுடில்லி
(D) மத்தியபிரதேசம்

89. ஒரு சவரன் (பவுன்) என்பது எத்தனை கிராம்?

(A) 7 கிராம் (B) 5 கிராம்

(C) 8 கிராம் (D) 4 கிராம்

90. வானவில்லில் உள்ள 7 வண்ணங்களில் நடுவில் உள்ள வண்ணம் எது?

(A) பச்சை (B) ஊதா

(C) சிவப்பு (D) நீலம்

91. எதையும் புரிந்து கொண்டு செயல்படும் ஆற்றலின் பெயர் என்ன?

(A) தூலங்கள் (B) தூண்டல்

(C) நுண்ணறிவு (D) ஆளுமை

92. இந்தியாவின் தலைசிறந்த கணித மேதை யார்?

(A) சர் சி.வி. ராமன் (B) இராமானுஜம்

(C) ஜான் நேப்பியர் (D) சர் ஹம்ப்ரி டேவி

93. கீழ்கண்டவற்றில் எதனை தயாரிக்க மரம் மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது?

(A) கண்ணாடி (B) மருந்து

(C) காகிதம் (D) உடை

94. 500 கிராம் எடையுள்ள ஒரு பார்சலுக்கு கொரியர் கட்டணம் ரூ. 60/- எனில், 5.5 கிலோகிராம் எடையுள்ள பார்சலுக்கு எவ்வளவு கட்டணம்?

(A) ரூ. 660/- (B) ரூ. 360/-

(C) ரூ. 500/- (D) ரூ. 560/-

95. சமர் தனது மாதச் சம்பளத்தில் 52% ஐ வீட்டுச் செலவுக்காகச் செலவிடுகிறார் மற்றும் இதர செலவினங்களுக்கு 23% ஐ செலவிடுகிறார். அவரிடம் ரூ. 4,500/- மீதமுள்ளது எனில், அவருடைய மாத சம்பளம் என்ன?

(A) ரூ. 16,000/-
(B) ரூ. 17,500/-
(C) ரூ. 17,000/-
(D) ரூ. 18,000/-

96. கங்கை நதியின் மிகப்பெரிய துணையாறு எது?

(A) காக்ரா
(B) காண்டக்
(C) யமுனா
(D) தாமோதர்

97. 1056 என்ற எண்ணுடன் எந்த குறைந்தபட்ச எண்ணை சேர்த்தால், அதனுடைய கூட்டுத்தொகை முழுமையாக 23ஆல் வகுபடும்?

(A) 2
(B) 3
(C) 18
(D) 21

98. எண் தொடரை முடிக்கவும்.

2, 7, 14, 23, ?, 47

(A) 31
(B) 28
(C) 34
(D) 38

99. காமன் வெல்த் விளையாட்டு, 2022 எங்கு நடைபெற்றது?

(A) இந்தியா
(B) இங்கிலாந்து
(C) ஆஸ்திரேலியா
(D) ஜப்பான்

100. ஆகஸ்ட் 15, 2022 இந்தியாவின் ———— சுதந்திர தினம்

(A) 72வது
(B) 74வது
(C) 75வது
(D) 76வது